புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை
முன்னிலை: திருமதி.கவிதா ராமு., இ.ஆ.ப.,

ந.க.அ3/14/2021 நாள்:18.11.2022

பொருள்: பொதுப்பணி - கருணை அடிப்படை பணி நியமனம் - புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலகு - புதுக்கோட்டை வருவாய் கோட்டம் - திருமயம் தாலுகா - அலுவலக உதவியாளர் - திரு. ச.முருகையா (லேட்) என்பவர் 18.08.2020-இல் பணிக்காலத்தில் மரணம் - வாரிசுதாரர் திரு.மு.சண்முகராஜ் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

1. அரசாணை எண். 18. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ) துறை, நாள்: 23.01.2020
2. சென்னை, கூடுதல் தலைமைச்செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதம் எண். பணி4(1)/02-44/1/2022, நாள்:05.07.2022
3. திரு.மு.சண்முகராஜ் த/பெ முருகையா (லேட்) என்பவரின் மனு நாள்:16.10.2020
4. புதுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலரின் கடித எண். நக. அ5/6030/2020, நாள்: 23.12.2020
5. புதுக்கோட்டை, அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலக உதவி இயக்குநரின் கடிதம் நக. 000004/அ4/2021, நாள் : 11.03.2021.
6. திருமயம் வட்டாட்சியரின் கடித ந.க.அ5/1506/2022, நாள்:25.02.2022

------

**ஆணை:**

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வருவாய் கோட்டம், திருமயம் தாலுகா, அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு. ச.முருகையா என்பவர் 18.08.2020 அன்று மரணமடைந்ததால் அவரது மகனும் வாரிசுதாரருமான திரு.மு.சண்முகராஜ் என்பவர், அவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக்கோரியது தொடர்பாக புதுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலர் பார்வை-4ல் காணும் கடிதத்தில் முழுமையான முன்மொழிவுகளை அனுப்பி வைத்துள்ளார். முன்மொழிவுகள் பரிசீலனை செய்யப்பட்டது.

2. பார்வை 1-ல் காணும் அரசாணையின்படி அரசுப்பணியாளர் மரணமடைந்த மூன்று ஆண்டுகளுக்குள் கருணை அடிப்படையில் வேலை கோரி மனுச் செய்ய வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. இந்நேர்வில் கண்ட அரசு ஊழியர் திரு. ச.முருகையா என்பவர் 18.08.2020 -இல் மரணமடைந்துள்ளார். அதன்படி மூன்றாண்டுகாலம் 17.08.2023 அன்று முடிவடைகிறது. தனியர் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 16.10.2020-இல் விண்ணப்பித்துள்ளார். மனு உரிய காலத்திற்குள் வரப்பெற்றதால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

...2

Scanned with ACE Scanner

3. கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறும் திரு.மு.சண்முகராஜ் என்பவர் 02.05.1995-இல் பிறந்துள்ளார். கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி அவர் விண்ணப்பம் அளித்த நாளில் (16.10.2020) அவருக்கு 25 வயது முடிவடைந்துள்ளது. அதே நாளில் அவர் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று உள்ளார். எனவே கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கத் தகுதியுடையவர் ஆகிறார். இவரது பத்தாம் வகுப்பு கல்விச்சான்று மெய்த்தன்மை உடையது என புதுக்கோட்டை, அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரக உதவி இயக்குநர் பார்வை-5 இல் காணும் கடிதம் மூலம் அறிக்கை அளித்துள்ளார்.

4. காலஞ்சென்ற அரசு ஊழியருக்கு பின்வரும் நபர்கள் வாரிசுதாரர்கள் என திருமயம் வட்டாட்சியரின் வாரிசு சான்றிதழ் எண்:TN-7202008241689 நாள்:05.09.2020-இன்படி சான்றளத்துள்ளார்.

| வ. எண் | வாரிசுதாரர்கள் பெயர் | உறவுமுறை | வயது | திருமணநிலை |
|---|---|---|---|---|
| 1. | தமிழரசி.எம் | மனைவி | 47 | கைம்பெண் |
| 2. | வெண்ணிலா.எம் | மகள் | 28 | திருமணமானவர் |
| 3. | சண்முகராஜ்.எம் | மகன் | 25 | திருமணமாகாதவர் |
| 4. | தேன்மொழி.எம் | மகள் | 23 | திருமணமாகாதவர் |

காலஞ்சென்ற அரசு ஊழியரின் வாரிசுதாரர்களில் அவரின் மனைவி திருமதி. தமிழரசி க/பெ.முருகையா, மகள்கள் திருமதி.வெண்ணிலா, மற்றும் செல்வி.மு.தேன்மொழி ஆகியோர் திரு.மு.சண்முகராஜ் என்பவருக்கு கருணை அடிப்படையில் அரசுப்பணி வழங்குவதற்கு ஆட்சேபணை இல்லை என உறுதிமொழி பத்திரம் அளித்துள்ளனர். காலஞ்சென்ற ச.முருகையா என்பவரின் வாரிசான திரு.மு.சண்முகராஜ் என்பவர், அவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு கோரியுள்ளார்.

5. திருமயம் வட்டாட்சியரின் ஒருங்கிணைந்த சான்று ப.மு.ஆ2/7077/2020 நாள்: 14.10.2020 -இன்படி, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகா, திருமயம் சரகம், பாப்பாவயல் கிராமத்தைச்சேர்ந்த திரு.முருகையா என்பவர் திருமயம் வட்டாட்சியர் அலுவலகத்தில், அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த நிலையில் கடந்த 18.08.2020 அன்று இறந்துவிட்டார் எனவும் திரு.முருகையா என்பவரின் நிலையான முகவரி புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகா, திருமயம் சரகம், பாப்பாவயல் கிராமம் எனவும், இறந்தவர் குடும்பத்தில் எவரும் அரசு நிறுவனங்களில் பணிபுரியவில்லை எனவும், மனுதாரரின் தாயார் திருமதி.தமிழரசி என்பவர் அவரது கணவர் திரு.முருகையா (லேட்) என்பவரது இறப்பிற்கு பின்னர் மறுமணம் செய்து கொள்ளவில்லை எனவும், மனுதாரர் இந்து பறையர் இனத்தை சேர்ந்தவர் ஆவார் எனவும், இறந்த திரு.முருகையா என்பவரது மகன் திரு.சண்முகராஜ் என்பவருக்கு ஒருங்கிணைந்த சான்றிதழ் வழங்க எவரும் ஆட்சேபணை செய்யவில்லை எனவும், திரு.முருகையா என்பவரது இறப்பிற்கு பின்னர் மனுதாரர் குடும்பத்தில் எவரும் அரசுப்பணியில் அல்லது தனியார் பணியில் இல்லை எனவும், மனுதாரரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/- எனவும் இறந்த திரு.முருகையா



Scanned with ACE Scanner

என்பவருக்கு திருமயம் தாலுகா மற்றும் சரகம் பாப்பாவயல் கிராமத்தில் ரூ.3,00,000/- மதிப்பில் சிறிய ஓட்டு வீடு ஒன்று உள்ளது எனவும், மனுதாரர் திரு.சண்முகராஜ் என்பவரது குடும்பம் வறிய நிலையில் இருந்து வருகிறது எனவும் சான்றளிக்கப்பட்டுள்ளது.

6. காலஞ்சென்ற அரசுப் பணியாளரின் வாரிசும் மகனுமான திரு.மு.சண்முகராஜ் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால் அவரைப் புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலகில், புதுக்கோட்டை வருவாய் கோட்டம், திருமயம் வட்டாட்சியர் அலுவலகத்தில் காலியாக உள்ள பணியிடத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக (ஊதிய விகிதம் 19500-62000) கருணை அடிப்படையில் தற்காலிக பணிநியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

7. தனியர் பணியேற்கும்போது அவரது உடல் தகுதிச் சான்று மற்றும் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு அட்டை ஆகியவற்றை பணியேற்பு அறிக்கையுடன் தாக்கல் செய்ய வேண்டும்.

8. இப்பணி முற்றிலும் தற்காலிகமானது ஆகும், துறைத்தலைவர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மற்றும் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னரே பணிவரன்முறை செய்யப்படும்.

9. எந்தவொரு தவறான தகவலின்பேரில் இப்பணி நியமனம் செய்யப்பட்டதாகப் பின்னர் தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இப்பணிநியமனம் ரத்து செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது. அத்தகைய நேர்வுகளில் இவர் மீது சட்டப்படியான ஒழுங்கு நடவடிக்கையுடன் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும் எனவும் சம்பந்தப்பட்ட நபருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/- கவிதா ராமு,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
புதுக்கோட்டை

//உத்தரவின்படி//

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

பெறுநர்,
திரு.மு.சண்முகராஜ்,
த/பெ.ச.முருகையா (லேட்),
எண்.9/219 A, பாப்பாவயல் தெரு,
திருமயம் தாலுகா
புதுக்கோட்டை மாவட்டம். - - - - - - - - - - - பதிவஞ்சலில்

நகல்: கூடுதல் தலைமைச்செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5 - --தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: வருவாய் கோட்டாட்சியர், புதுக்கோட்டை
நகல்: வருவாய் வட்டாட்சியர், திருமயம்,
நகல்: அ3 - இருப்புக்கோப்பு
நகல்: அ1 - பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள

Scanned with CamScanner



Scanned with ACE Scanner